## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் ஏனுபுனு உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்புடனான இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 3.9 ஆம் பிரிவின் பிரகாரம் பாதீடு மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கு இடையே பொருண்மையான வேறுபாடுகள் இருந்தால் அதற்குரிய காரணங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக 2019 திசெம்பர் 26 ஆந் திகதிய 6/2155 ஆம் இலக்க மாநாகர சபைகள் நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை இலக்கம் 99 இன் மூலமும் இது தொடர்பாக கவனம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | அடுத்த ஆண்டிலிருந்து வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நியமங்கள் மற்றும் வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் 4.6 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்டிருந்த | எதிர்காலத்தில் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நியமங்கள் மற்றும் வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட ஒழுங்கைகள் மதகுகள் மற்றும் பாலங்கள் என்பன மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நூலகப் புத்தகங்கள் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட மீதி மீள் மதிப்பீட்டு மீதியான முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | | எடுக்கப்பட வேண்டும். |

## 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் 6.15 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் எதிர்கால பொருளாதார நலன்களை பயன்படுத்துவதற்கு அது எதிர்பார்க்கப்படும் போக்கு பிரதிபலிக்கும் வகையில் பெறுமானத்தேய்வு செய்யும் முறைமையொன்றை நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட வேண்டும். எனினும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 3.5 மூலம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்வு செய்யப்படவில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதிக் கூற்றுக்களில் விரிவான வருமானக் கூற்றில் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படாத ரூபா 6,632,814 தொகை பெறுமானத்தேய்வாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் குறிப்பு 8 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 6,632,814.67 தொகை பெறுமானத்தேய்வு செய்யப்படாததுடன் செலவினத்தின் வரவு மற்றும் செலவில் பதிவு செய்யப்பட்ட நாட்குறிப்பு பதிவுகளின் கூட்டுத் தொகையாகும். இது தவறுதலாக பெறுமானத் தேய்வு விபரத்தின் கீழ் காண்பிக்கப் பட்டுள்ளது. | நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் நானாவித செலவினம் ரூபா 14,459,683 மற்றும் ரூபா 7,826,870 செலவு வைத்து அவற்றை விரிவான வருமானக் கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டிருக்க வில்லை. | தவறுதலாக சீராக்கப்பட்ட இப்பெறுமதி பெறுமானத்தேய்வு விபரத்தின் கீழ் காண்பிக்கப் பட்டுள்ளதாக அறிய தருகின்றேன் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | ஜனஜய சிட்டி சுபர் வர்த்தக தொகுதியின் ஜெனரேட்டர் சேவை புரிவதற்காக 2020 ஒக்தோபர் 01 ஆம் திகதி முதல் 2021 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை ரூபா 529,448 கடன் கொடுத்தோர் ஒதுக்கம் காரணமாக மீளாய்வாண்டின் போது 2021 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 397,086 ஆல் கடன்கொடுத்தோர் செலவினம் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டில் கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 3,814,274 ஆக இருந்த போதும் கணக்குகளில் ரூபா 3,322,679 ஆக காண்பித்தமையால் ரூபா 491,595 ஆல் கட்டிடங்கள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது அத் தவறுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | அனைத்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | நூலக புத்தகங்களின் பெறுமதியான ரூபா 14,603,915 இற்காக பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் பெறுமானத்தேய்வு பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பு 2021 ஆம் ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | பெறுமானத் தேய்வுப் பெறுமதியை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரைநிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாத ரூபா 3,322,679 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் ரூபா 18,610,264 பெறுமதியான ஒழுங்கைகள், மதகுகள் மற்றும் பாலங்கள் நடைமுறை வேலைகள் என்பவற்றின் கீழ் செய்யப்பட வேண்டிய போதிலும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மாத்திரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 11,402,240 ஆன வட்டி வருமானம், காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப்பாய்ச்சலுக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சரியாக காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | அனைத்து பணப் பெறுவனவுகள் காசுப் பாய்ச்சலில் உள்ளடக் கப்பட வேண்டும் |
| (ஏ) | பிட்டகோட்டே, பாகொடை வீதியில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குரிய காணி பகுதி தற்காலிகமாக பெற்றுக்கொள்வதற்காக இலங்கை போக்குவரத்து சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,260,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | அடுத்த ஆண்டில் கணக்குகளில் சீராக்கு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஐ) | புதிய நகர சபை கட்டிடத்தின் உள்ளக நிர்மா செயற்பாடுகளுக்காக மதியுரை சேவைகளை வழங்குவதற்காக மதியுரை நிறுவனத்திற்கு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொழில்துறைக் கட்டணங்கள் ரூபா 21,639,056 மற்றும் தாமத வட்டி ரூபா 1,645,818 கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்கு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய ரூபா 20,353 பெறுமதியான நேரடி வங்கி செலவு வைத்தல் 05 மற்றும் ரூபா 106,414 ஆன நேரடி வங்கி வரவு வைத்தல் காசேட்டிற்கு சீராக்கம் செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் செலவினம் ரூபா 20,353 ஆலும் ரூபா 106,414 ஆலும் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் வங்கியுடன் கலந்துரையாடி தர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருதாக அறிய தருகின்றேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஓ) | 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,577,771 ஆன 32 CCTV கமராக்கள் மற்றும் 02 தொலைக்காட்சி இயந்திரங்கள் உட்பட உபபாகங்களுடன் கூடிய 69 கமரா தொகுதிகளுடன் கூடிய GPS தொழில்நுட்ப உதிரிப் பாக தொகுதிகள் மற்றும் பெலின் இயந்திரம் மூலதனமாக்கப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யாமையால் அப்பெறுமதியால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தேடி ஆராய்ந்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருதாக அறிய தருகின்றேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஔ) | ஜனஜய சிட்டி செயற்திட்டத்திற்காக நவலோக்க கன்ஸ்ரக்ஷன் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,488,509 மற்றும் தாமத வட்டி ரூபா 29,631,518 மற்றும் நிறுத்தி வைத்தல் தொகை ரூபா 84,399,312 தொகை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாமையால் அப்பெறுமதியால் கடன்கொடுத்தோர் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தேடி ஆராய்ந்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய தருகின்றேன். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 கணக்குப் விடயங் களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காண்பிக்கும் பெறுமதி அண்மித்த / அறிக்கைமீதிகளுக்கு இடைளேய ரூபா ரூபா 67,143,237 ஆன வேறுபாடு காணப்பட்டது | வேறுபாடுகளை எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கைகள் எடுப்பேன் | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 41,252,290,763 பெறுமதியான 03 கணக்கு விடயங்களை பரீட்சிப்பதற்காக தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய அல்லது மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | எதிர்காலத்தில் தேவையான தகவல்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். | கணக்காய்விற்கு தேவையான விரிவான அட்டவணைகள், பதிவேடுகள் மதிப்பீடு உட்பட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 371(5) | மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,291,097 முற்பணத் தொகையை திசெம்பர் 31 இற்கு முன்னர் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | சமயா சமய, அமைய மற்றும் நிரந்தர ஊழியர்களிடமிருந்தும் பிணை மீது விழா முற்பணத் தொகை குறித்த பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முற்பணங்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| | XXIV அத்தியாயத்தின் 4.2.5 ஆம் பிரிவு | ஓய்வுபெற்ற 34 உத்தியோ கத்தர்களிடமிருந்து அறவிடுவதற்குள்ள நிலுவை கடன் தொகை | ஓய்வுபெற்ற ஊழியர்களுக்குரிய ரூபா 1,570,614 ஆன ஊழியர் கடன்களை | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நிலுவை ஊழியர் |

| | | |
|---|---|---|
| ரூபா 1,570,614 ஐ குறித்த உத்தியோகத்தரின் மாற்றிய ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அல்லது ஓய்வூதிய நிதியத்திலிருந்து அறவிட முடியுமாக இருக்கையில் அவர்களுக்கு "அறவீடற்ற சான்றிதழ்" வழங்கப்பட்டு உத்தியோகத்தரிடமிருந்து குறித்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பத்தாண்டுகளுக்கு முன்னர் ஓய்வுபெற்றுள்ள ஊழியர்களின் சேவைக் கடன் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக பொறுப்பான தரப்பினரை நிச்சயித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 102,549,081 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமரினத்தை விஞ்சிய செலவனம் ரூபா 75,615,584 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீத வரி** | | |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரி மீதி ரூபா 129,457,211 ஆக இருந்ததுடன் ரூபா 50,000 இனை மிகைத்த வீடுகள், வெற்றுக் காணிகள் மற்றும் 270 வியாபார நிலையங் களிலிருந்து ரூபா 43,946,161 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சட்டரீதியான அறிவித்தல் வழங்கப்பட்டு நிலுவையில் கூடிய அளவினை அறவிடுதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) கடை வாடகை**

-------------------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய மொத்த கடை வாடகை வருமானம் ரூபா 24,171,063 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவை கடை வாடகையில் கூடிய அளவினை அறவிடுதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) களியாட்ட வரி**

-----------------------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய களியாட்ட வரி மீதி ரூபா 3,169,717 ஆக இருந்தது. | அறவிடப்பட வேண்டிய களியாட்ட வரி வருமானத்தை அறவிடு வதற்கு விடயப் பொறுப்பு அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் கிடைத்த பின்னர் பெறவேண்டிய களியாட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய களியாட்ட வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஈ) கழிவுப்பொருள் வெளியேற்றும் கட்டணங்கள்**

-----------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் இறுதியில் அறவிடப்பட வேண்டிய கழிவுப்பொருள் வரி மீதி ரூபா 4,664,226 ஆக இருந்தது. | தற்போது கொடுப்பனவிற்கு சிரமமானவியாபார நிலையங்களுக்கு சலுகை காலமொன்று வழங்குதல், நிலுவை மீதிகளை தவணை அடிப்படையில் நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | பெற வேண்டிய வருமானதத்தை சேகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(உ) வரி வருமானம்

--------------------------

| | | |
|---|---|---|
| ரூபா 235,452,983 ஆன வரி வருமானம் மற்றும் ரூபா 129,457,211 ஆன நிலுவை வரி வருமானத்தை பரீட்சிப்பதற்கு விரிவான அட்டவணையில் கணனி மென்பொருளின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் உரிய தகவல்களை காலப்பகுப்பாய்வுடன் சமர்ப்பிக்கின்றேன். | கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

--------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிற்குரிய அரசின் மானியங்களின் மூலம் 'சபிரி கமக்' சமூக அடிப்படையிலான கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் ஒபேசேகரபுர தர்மபால மாவத்தை 60 ஆம் தோட்டம் வீதவரி இலக்கம் 48/68/1 இலிருந்து வடிகாணை தேவையான இடங்களிற்கு கொங்கிரீட் இட்டு புனரமைப்பதற்காக ரூபா 833,161 ஆன மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அந்நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் பிரதேச வாசிகளின் எதிர்ப்பு காரணமாக திட்டத்தை மாற்றி ரூபா 381,948 ஆன கிரயமொன்று மேற்கொண்டு அச் செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக நகர பொறியியலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அது செயற்திறனாக நிறைவேற்றப்படவில்லை என்பதால் பிரதேச செயலகத்தினால் சபைக்கு மானியங்கள் வழங்குவதை நிராகரித்திருந்ததுடன் ரூபா 381,948 சபையின் செலவினமொன்றாக இருந்ததுடன் அது சபைக்கு ஏற்பட்ட நட்டமாக இருந்தது. | குறித்த செயற்திட்டத்திற்காக செலவாகிய ரூபா 381,948 தொகை சபைக்கு ஏற்பட்ட நட்டமாக இருந்ததுடன் அதனை அறவிட முடியவில்லை. | பொறுப்பானவர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 பெப்ரவரி 16 ஆந் திகதி ரூபா 619,276,616 ஆன ஒப்பந்த பெறுமதிக்கு பிட்டகோட்டை ஜனஜய சிட்டி கலப்பு அபிவிருத்தி செயற்திட்ட நிர்மாணத்திற்காக | பழைய ஒப்பந்த நிறுவனம் மற்றும் மதியுரை நிறுவனத்தின் மூலம் எதிர்காலத்தில் இச்செயற்பாடுகளை | குறித்த நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருடன் 2016 பெப்ரவரி 15 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதற்காக மதியுரையாளர் கட்டணமாக ரூபா 2,638,191 உள்ளடக்கி மொத்த செலவினம் ரூபா 255,707,477 தொகை 2018 ஆம் ஆண்டு வரை செலவிடப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் கட்டமைப்பில் கோடுகள் விழும் தவறொன்று மீது சபையால் 2017 மே 17 ஆந் திகதி செயற்திட்டத்தின் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் 2018 செப்தம்பர் 10 ஆந் திகதி ஒப்பந்தக்காரர் வேலைத்தளத்தினை விட்டுச்சென்றிருந்தார். | ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இடம்பெற்ற நட்டத்தை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 69,704,581 மதிப்பீட்டுப் பெறுமதியான 28 வீட்டுதொகுதியுடன் கூடிய மொரகஸ்முல நான்கு மாடி வீட்டுத் தொகுதி 06 மாத காலப்பகுதியில் வேலைகளை பூர்த்தி செய்து கையளிப்பதற்காக 2016 யூன் 01 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 62,986,117 தொகையும் மேலதிக வேலைகளுக்காக ரூபா 7,538,424 தொகை உட்பட ரூபா 70,524,541 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் ஒப்பந்தகாரர் வேலையை பூர்த்தி செய்யாமல் நிர்மாணத்தை கைவிட்டிருந்தார். மேலும் 2019 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தக்காரரிடமிருந்து விலகி சபையின் நேர் உழைப்பினை ஈடுபடுத்தி 18 வீட்டு அலகுகளுக்காக ரூபா 3,630,781 ஆன மூலப்பொருள் கிரய மொன்றும் ரூபா 155,726 ஆன உணவு, நீர் மின்சாரம் என்பவற்றிற்காக செலவிடப் பட்டிருந்த போதும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் செயற் திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | தற்போது குறித்த செயற் திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | நிர்மாணத்தின் வேலைகளை நிறைவேற்றவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தகடகாரரை கறுப்பு பட்டியலில் இட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |